**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE OF KARUR.**

| | | |
|---|---|---|
| Sessions Case No. | : | 17/2021 |
| | : | Prosecution - **PW-41** |
| Deposition of witness for | : | Defense |

| | | | |
|---|---|---|---|
| Name | : முகேஷ் ஜெயக்குமார் | Father's Name : | |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act 44 of 1979 of the $25^{th}$ day of October 2024.

**(**குற்ற இறுதியறிக்கையில் உள்ள வரிசைப்படி எதிரிகள் வரிசைப்படுத்தப்பட்டுள்ளனர்**.** **1**ம் எதிரி கோகுலகிருஷ்ணன் **(**எ**)** கோகுல்**,** **2**ம் எதிரி துரைப்பாண்டி **(**எ**)** பாண்டி**,** **4**ம் எதிரி மணிகண்டன் **(**எ**)** **R.S.**மணி**,** **5**ம் எதிரி ரமேஷ் **(**எ**)** காவியாரமேஷ்**,** **8**ம் எதிரி தமிழரசன்**,** **9**ம் எதிரி அஜீத்குமார்**,** **10**ம் எதிரி செந்தில் **(**எ**)** செந்தில்ஈஸ்வரன்**,** **11**ம் எதிரி கலைச்செல்வன்**,** **12**ம் எதிரி விமல் பஷீர் ஆகியோர் முன்னிலையாகியுள்ளனர்**.**

**6, 7, 9, 11** எதிரிகள் ஆஜர் இல்லை. **6, 7, 9, 11** எதிரிகள் தரப்பில் குவிமுச பிரிவு **317**ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு, மனு அனுமதிக்கப்பட்டது**.**

**3**ம் எதிரி இவ்வழக்கிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டு, அவருக்கு எதிரான சிறப்பு வழக்கு **SPL.SC. 11/2023** நிலுவையில் இருந்து வருகிறது**)**

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது சென்னை, செம்மியம் காவல் சரகத்தில், காவல் உதவி ஆணையராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 01.10.2020 அன்று கரூர் நகர உட்கோட்ட காவல்துணை கண்காணிப்பாளராக பணிபுரிந்தபோது, கரூர் நகர கா.நி.கு.எண். 1031/2020 ச/பி. 302, 34, 120(பி), 506(ii) இதச @ 302, 34, 120(பி), 506(ii) இதச உ/இ. 3(2) (v) பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர் வன்கொடுமை தடுப்பு சட்டத்தின் கீழான வழக்கை என்னை புலன்விசாரணை அதிகாரியாக நியமித்து, கரூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஒரு செயல்முறை ஆணை பிறப்பித்தார். அந்த செயல்முறை ஆணை அ.சா.ஆ.53. அதன்படி, புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்டு, அன்றைய தினம் 18.00 மணிக்கு வழக்குக்கோப்பை பார்வையிட்டு, சம்பவ இடத்தை பார்வையிட்டேன்.

02.10.2020 அன்று காலை 6.00 மணிக்கு வழக்கின் சம்பவ இடத்திற்கு முந்தைய புலன்விசாரணை அதிகாரி ஆய்வாளர் உதயக்குமார் என்பவர் சம்பவ இடத்தை அடையாளம் காட்ட, அவர் தயார் செய்த பார்வை மகஜர், மாதிரி வரைபடம் ஆகியவற்றை சம்பவ இடத்தில் வைத்து பார்த்தேன். நான் தனியாக அவைகளை தயாரிக்கவில்லை.

அன்றைய தினம் காலை 8.00 மணிக்கு புகார்தாரர் சஷ்மிதா என்பவரை அவரது வீட்டில் வைத்து கரூர், அனைத்து மகளிர் காவல் ஆய்வாளர் திருமதி.சித்ராதேவி என்பவர் உதவியுடன் வாக்குமூலம் பதிவு செய்தேன்.

அன்றைய தினம் காலை 9.30 மணிக்கு சாட்சிகள் பெரியசாமி, பிரவீன் ஆகியோரை கரூர் நகர காவல்நிலையத்தில் வைத்து விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்தேன்.

பின்னர் வழக்கின் எதிரி அரவிந்த் (எ) அரவிந்த்குமார், அஜீத் ஆகியோருக்குசாதிச்சான்றிதழ்கள் கேட்டு மண்மங்கலம் வட்டாட்சியருக்கு விண்ணப்பம் கொடுத்தேன்.

எதிரிகள் கோகுலகிருஷ்ணன், துரைப்பாண்டி, மணிகண்டன், தமிழரசன், கலைச்செல்வன், கேசவன் ஆகியோர்களுக்கு சாதிச்சான்றிதழ்கள் கேட்டு, கரூர் வட்டாட்சியருக்கு விண்ணப்ப கடிதம் கொடுத்தேன்.

03.10.2020 அன்று கிடைத்த தகவலின்பேரில், காலை 11.00 மணிக்கு கரூர், திருவள்ளுவர் மைதானம் ஆடிட்டோரியம் அருகில் TN 63 AW 6699 என்ற யானை நிறத்திலான வெர்னா காரில் சந்தேகப்படும்படியாக இருந்த நபரான பிரேம்குமார் என்பவரை ஆய்வாளர் உதயக்குமார் என்பவர் பிடித்து வாகனத்துடன் என்னிடம் ஒப்படைத்தவரை விசாரித்தபோது, அவர் வழக்கில் சம்மந்தப்பட்டிருப்பதை ஒப்புக்கொண்டதால், அவரை கரூர் நகர காவல்நிலையத்தில் வைத்து பகல் 11.15 மணிக்கு கைது செய்தேன். அன்றைய தினம் காவல்நிலையத்திற்கு வரவழைக்கப்பட்ட சாட்சிகள் பிரகாஷ், சுலோச்சனா ஆகியோர் முன்னிலையில் எதிரி பிரேம்குமாரை விசாரித்தபோது, அவர் தானாக முன்வந்து அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தேன். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில், TN 63 AW 6699 என்ற யானை நிறத்திலான வெர்னாகாரை 13.30 மணிக்கு அதே சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜரில் காவல்நிலையத்தில் வைத்து கைப்பற்றினேன். எதிரி பிரேம்குமார் தலைமறைவாக இருப்பதற்கு உதவிய எதிரி விமல்பஷீர் என்பவரை அன்றைய தினம் எதிரி பிரேம்குமார் அடையாளம் காட்ட 15.00 மணிக்கு பசுபதிபாளையம், ரயில்வே கிராஸ், குகைப்பாலம் அருகில் காரணம் கூறி கைது, செய்து, நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன்.

பின்னர் சாட்சிகள் பிரகாஷ், சுலோச்சனா ஆகியோரை விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்தேன்.

04.10.2020 அன்று காலை 6.30 மணிக்கு எதிரி ரமேஷ் (எ) காவியாரமேஷ் என்பவரை கரூர், ராமானுஜம் நகர், தெற்கு தெருவில் அவரது வீட்டின் முன்பு வைத்து காரணம் கூறி கைது செய்து, .............

நீதிமன்றக்காவலுக்கு அனுப்பி வைத்தேன். அன்றைய தினம் சாட்சி அஷ்வினி என்பவரை அவரது வீட்டில் வைத்து அனைத்து மகளிர் காவல் ஆய்வாளர் சித்ராதேவி உதவியுடன் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

05.10.2020 அன்று எதிரிகள் துரைப்பாண்டி, மணிகண்டன், பிரேம்குமார் ஆகியோர்களை கண்ணுற்ற சாட்சி சஷ்மிதா என்பவர்மூலம் அடையாள அணிவகுப்பு நடத்துவதற்கு தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களுக்கு விண்ணப்பம் கொடுத்தேன்.

எதிரி பிரேம்குமார் என்பவருக்கு சாதிச்சான்றிதழ் கேட்டு, தேவக்கோட்டை வட்டாட்சியருக்கும், எதிரி கோகுலகிருஷ்ணன், மணிகண்டன், தமிழரசன், ரமேஷ் (எ) காவியாரமேஷ், விமல்பஷீர் ஆகியோருக்கு சாதிச்சான்றிதழ் மண்மங்கலம் வட்டாட்சியருக்கு வேண்டுகோள் கடிதங்கள் கொடுத்தேன்.

06.10.2020 அன்று வழக்கில் இறந்துபோன கிருஷ்ணமூர்த்தி பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்த உதவி பேராசிரியர் மருத்துவர் திரு.மணிவாகசம் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

13.10.2020 அன்று குற்றவியல் நீதித்துறை நடுவர் எண். 2 குளித்தலை அவர்கள் முன்னிலையில் எதிரி பிரேம்குமார் என்பவரை கரூர், கிளைச்சிறையில் அடையாள அணிவகுப்பும், எதிரிகள் மணிகண்டன், துரைப்பாண்டி ஆகியோர்களை குளித்தலை, கிளை சிறையில் வைத்தும் அடையாள அணிவகுப்பு நடத்தப்பட்டது. குளித்தலை நீதித்துறை நடுவர் எண். 1 அளித்த அடையாள அணிவகுப்பு அறிக்கை நீ.ம.சா.ஆ.3.

வழக்கின் புகார்தாரர் சஷ்மிதா மற்றும் கண்ணுற்ற சாட்சிகள் பெரியசாமி ஆகியோரை குவிமுச பிரிவு 164(5)ன் கீழ் வாக்குமூலம் பதிவு செய்வதற்கு, நீதித்துறை நடுவருக்கு வேண்டுகோள் கடிதம் வைத்தேன். பின்னர், நீதிமன்ற உத்தரவுப்படி மேற்படி சாட்சிகளை நீதித்துறை நடுவர்

எண். 2, கரூர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினேன்.

18.10.2020 அன்று எனக்கு கிடைத்த தகவலின்படி, காலை 7.00 மணிக்கு கரூர் - மதுரை ரோடு, அமராவதி பாலம் சுக்காலியூர் பிரிவு ரோடு கிழக்கு பக்கம் நின்றுக்கொண்டிருந்த எதிரி செந்தில் (எ) செந்திலீஸ்வரன் என்பவரை காரணம் கூறி கைது செய்து, கரூர் நகர காவல்நிலையத்தில் வைத்து, அன்றைய தினம் காலை 8.45 மணிக்கு விசாரித்து, அவரது வாக்குமூலத்தை பெற்று, அவரிடமிருந்து ஆதார் அடையாள அட்டை நகலை பெற்று, நீதிமன்றக்காவலுக்கு அனுப்பி வைத்தேன்.

19.10.2020 அன்று எதிரி செந்தில் (எ) செந்திலீஸ்வரன் என்பவருக்கு சாதிச்சான்றிதழ் கேட்டு, கரூர் வட்டாட்சியருக்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்தேன்.

20.10.2020 அன்று, வட்டாட்சியர் செந்தில்குமார் என்பவரை விசாரித்து, எதிரிகள் கோகுலகிருஷ்ணன், மணிகண்டன், தமிழரசன், கலைச்செல்வன், விமல்பஷீர் ஆகியோருக்கு சாதிச்சான்றிதழ்கள் பெற்று, வாக்குமூலம் பதிவு செய்தேன்.

எதிரிகள் தமிழரசன், கலைச்செல்வன், விமல்பஷீர் ஆகியோருக்கு வட்டாட்சியரிடமிருந்து நான் பெற்ற சாதிச்சான்றிதழ்கள் முறையே அ.சா.ஆ.54 முதல் அ.சா.ஆ.56.

எதிரி கேசவன் மற்றும் புகார்தாரர் சஷ்மிதா ஆகியோர் இருப்பிடம், மண்மங்கலம் வட்ட எல்லைக்குள் உள்ளதால் கரூர் வட்டாட்சியரின் அறிக்கையின்பேரில், மண்மங்கலம் வட்டாட்சியரிடம் சாதிச்சான்றிதழ்கள் கேட்டு விண்ணப்பகடிதம் கொடுத்தேன்.

பின்னர், சாட்சி காளிதாசன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

31.10.2020 அன்று எதிரி பிரேம்குமார் என்பவர் பயன்படுத்திய செல்போன் எண்ணின் சிம்கார்டு உரிமையாளர் திருமதி.கவிதா என்பவரை அழைப்பாணை மூலம் வரவழைத்து, கரூர் நகர காவல்நிலையத்தில் வைத்து, விசாரித்து, வாக்குமூலம் பதிவு செய்தேன்.

02.11.2020 அன்று, எதிரி கலைச்செல்வன் என்பவர் பயன்படுத்தி வந்த செல்போன் எண்ணின் சிம்கார்டு உரிமையாளர் சிவசண்முகம் என்பவரையும், எதிரி செந்திலீஸ்வரன் என்பவர் பயன்படுத்தி வந்த செல்போன் எண்ணின் சிம்கார்டு உரிமையாளர் ரவி என்பவரையும் விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்தேன்.

03.11.2020 அன்று சாட்சிகள் அஷ்வினி மற்றும் கவிதா ஆகியோரை குவிமுச பிரிவு 164(5)ன் கீழ் வாக்குமூலம் பதிவு செய்வதற்கு நீதித்துறை நடுவர் எண்.2 அவர்களுக்கு விண்ணப்ப கடிதம் கொடுத்தேன்.

07.11.2020 அன்று எதிரிகள் செந்திலீஸ்வரன் என்பவருக்கு சாதிச்சான்றிதழ் வழங்கிய கரூர் வட்டாட்சியர் செந்தில்குமார் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

08.11.2020 அன்று எதிரி அரவிந்த்குமார் என்பவருக்கும், வாதி சுஷ்மிதா, இறந்துபோன கிருஷ்ணமூர்த்தி ஆகியோருக்கும் சாதிச்சான்றிதழ் வழங்கிய மண்மங்கலம் வட்டாட்சியர் கண்ணன் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

09.11.2020 அன்று சாட்சி செல்வி அஷ்வினி, கவிதா ஆகியோருக்கு குற்றவியல் நீதித்துறை நடுவர் எண். 2 நீதிமன்றத்தில் வாக்குமூலம் பெறப்பட்டது.

13.11.2020 அன்று எதிரி பிரேம்குமார் என்பவருக்கு சாதிச்சான்றிதழ் வழங்கிய தேவக்கோட்டை வட்டாட்சியர் சேகர் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

23.11.2020 அன்று எதிரி அஜீத் என்பவருக்கு சாதிச்சான்றிதழ் வழங்கிய கரூர் வட்டாட்சியர் சக்திவேல் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

01.12.2020 அன்று எதிரி துரைப்பாண்டி என்பவரின் தாயார் திருமதி.பேச்சிமுத்து என்பவரை விசாரித்தேன். விசாரணையின்போது எதிரி துரைப்பாண்டி என்பவருக்கு கரூர் வட்டாட்சியர் வழங்கிய சாதிச்சான்றிதழின் நகலை ஆஜர் செய்ததை பெற்று, அதன் உண்மை தன்மை அறிவதற்கு, கரூர் வட்டாட்சியருக்கு கடிதம் கொடுத்து, உண்மை தன்மை சான்று வழங்கிய கரூர் வட்டாட்சியர் செந்தில்குமார் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

06.12.2020 அன்று, சாட்சிகள் காவலர் 1618 ரவிக்குமார், காவலர் 105 அருள், உதவி ஆய்வாளர் பெரியசாமி, புகைப்பட நிபுணர் குமார் ஆகியோரை விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்தேன்.

09.12.2020 அன்று கரூர், அப்பல்லோ லோகா மருத்துவமனை மருத்துவர் திரு.மகுடீஸ்வரன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். தடய அறிவியல் துறை மருத்துவர் பேராசிரியர் திரு.மணிவாசகம் என்பவரை விசாரித்து, பிரேத பரிசோதனை இறுதி சான்று பெற்றேன். பின்னர் வட்டார தடய அறிவியல் ஆய்வக உதவி இயக்குநர் திரு.சண்முகம் என்பவரை விசாரித்து, அறிக்கை பெற்று, வாக்குமூலம் பதிவு செய்தேன். அவர் வழங்கிய உயிரியல் அறிக்கை நீ.ம.சா.ஆ.4. குருதி வடிநீரியல் அறிக்கை நீ.ம.சா.ஆ.5.

10.12.2020 அன்று மாவட்ட அமர்வு நீதிமன்ற தலைமை எழுத்தர் திருமதி.முத்தமிழ்செல்வி, திரு.பிரசாந்த், பெண்காவலர் 1857 நளினி ஆகியோரை விசாரித்து, வாக்குமூலங்கள் பதிவு செய்தேன்.

11.12.2020 அன்று சாட்சிகள் ரஞ்சிதம், பிரவீன் ஆகியோரை விசாரித்து மறுவாக்குமூலங்கள் பதிவு செய்தேன்.

பின்னர் சாட்சி கார்த்திக், முதல்நிலைகாவலர் முருகேசன் ஆகியோரை விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்தேன்.

19.12.2020 அன்று எதிரி ரமேஷ் (எ) காவியாரமேஷ் தவிர மற்ற எதிரிகளுக்கு எதிராக குற்ற அறிக்கை தாக்கல் செய்தேன்.

21.12.2020 அன்று எதிரி ரமேஷ் (எ) காவியாரமேஷ் என்பவருக்கு சாதிச்சான்றிதழ் வழங்கிய கரூர் வட்டாட்சியர் செந்தில்குமார் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

எதிரிகள் பிரேம்குமார், காவியாரமேஷ் ஆகியோரின் தொலைபேசி எண்களின் அழைப்பு விவர அறிக்கைக்கு ச/பி. 65 பின் கீழ் சான்று பெறவேண்டி, சென்னை ஏர்டெல் மற்றும் வோடபோன் தலைமை அலுவலகங்களுக்கு கரூர், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்கள் மூலம் வேண்டுகோள் கடிதம் கொடுத்தேன்.

28.12.2020 அன்று எதிரி பிரேம்குமாருக்கு சிகிச்சையளித்த மருத்துவர் திரு.வினோத்கண்ணன் என்பவரை விசாரித்து, காயச்சான்றிதழ் பெற்று, வாக்குமூலம் பதிவு செய்தேன்.

பின்னர் தலைமைக்காவலர் 1081 முத்துச்சாமி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அவர் ஒப்படைத்த கரூர் நகர காவல்நிலைய பொதுநாட்குறிப்பின் உண்மை தன்மை சான்றுடன் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன்.

29.12.2020 அன்று பாரத் ஏர்டெல் நிறுவன அதிகாரி டேவிட்ஜோசப் பால்ராஜ் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, ச/பி. 65(பி) சான்றிதழ் பெற்றும், வோடபோன் நோடல் அதிகாரி திரு.கார்த்திக் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, 65(பி)ன் கீழான சான்றிதழ் பெற்றேன்.

30.12.2020 அன்று ஆய்வாளர் உதயக்குமார் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

31.12.2020 அன்று சாட்சி சக்திவேல் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். சாட்சி செல்வி தாரணி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

அன்றைய தினமே, எதிரி ரமேஷ் (எ) காவியா ரமேஷ் என்பவருக்கு எதிராக எனது இரண்டாவது குற்ற இறுதியறிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன்.

எதிரி காவியாரமேஷ் என்பவரின் அலைபேசி எண். 9943440887 என்ற எண்ணுக்குரிய அழைப்பு விவர அறிக்கை மற்றும் டவர் லோகேசன் விவர அறிக்கை வோடபோன் நிறுவனத்திலிருந்து பெற்றேன். அந்த அறிக்கை அ.சா.ஆ.57.

05.05.2021 அன்று சென்னை தடய அறிவியல் ஆய்வகத்திலிருந்து இந்நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட வேதியியல் அறிக்கை நீ.ம.சா.ஆ.6.

**1** மற்றும் **4** எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் முன்னிலையில்லை. சட்டஉதவி மைய வழக்கறிஞரை வைத்து வழக்கு நடத்த விருப்பமில்லை என்றும், தங்கள் வழக்கறிஞரை வைத்துதான் வழக்கு நடத்த வேண்டும் என தெரிவித்தனர். எனவே குவிமுச பிரிவு 309 2 வது விலக்கு வாசகத்தின்படி சாட்சி குறுக்கு விசாரணை செய்வதிலிருந்து விலக்களிக்கப்படுகிறார்.

**2, 6, 8, 9** மற்றும் **12** ம் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

எதிரிகள் தரப்பு மூத்த வழக்கறிஞர் மதுரையில் வேறு வழக்கில் ஆஜராகியுள்ளார் என்றும், எனவே குறுக்கு விசாரணைக்கு காலஅவகாசம் வேண்டும் என இளநிலை வழக்கறிஞர் கோரினார். குவிமுச பிரிவு 309 2 வது விலக்கு வாசகத்தின்படி வழக்கறிஞர் வேறு நீதிமன்றத்தில் .............

ஆஜராவது, வழக்கை ஒத்தி வைப்பதற்கு போதிய காரணம் இல்லை என்பதால், சாட்சி குறுக்கு விசாரணை செய்வதிலிருந்து விலக்களிக்கப்படுகிறார்.

<u>**5** ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

அ.சா.4 அஷ்வினி வாக்குமூலத்தை, எந்த தேதியில் அனுப்பி வைத்தேன் என்றால் நான் உடனடியாக அனுப்பினேன். 21.12.2020 அன்று நீதிமன்றத்தில் பெறப்பட்டுள்ளது.

சாட்சி பட்டியல் எண். 24 கார்த்திக், நோடல்அதிகாரியின் வாக்குமூலத்தை எந்த தேதியில் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன் என்றால் 29.12.2020 அன்று நான் விசாரித்து, உடனடியாக வாக்குமூலத்தை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். முதலாவது குற்ற அறிக்கை அனுப்பிய பிறகுதான் மேற்சொன்ன சாட்சிகளின் வாக்குமூலங்களை நான் நீதிமன்றத்திற்கு அனுப்பினேன் என்றால் சரியல்ல.

அ.சா.4 அஷ்வினி வாக்குமூலத்தையும், முதல் குற்ற அறிக்கை தாக்கல் செய்த பின்னர்தான் நீதிமன்றத்திற்கு அனுப்பினேன் என்றால் சரியல்ல. அ.சா. அஷ்வினி என்பவரை எத்தனை மணிக்கு நான் விசாரித்தேன் என்றால் 04.10.2020 அன்று காலை 10.00 மணிக்கு விசாரிக்க ஆரம்பித்து, 11.00 மணிக்கு விசாரித்து முடித்தேன்.

5 ம் எதிரியை கைது செய்த பிறகுதான், சாட்சிகளை தயார் செய்தேன் என்றால் சரியல்ல. அ.சா.4 அஷ்வினியை விசாரித்தபோது, உடனிருந்த பெண் ஆய்வாளரின் வாக்குமூலத்தை வாங்கினேனா என்றால் அது தேவையில்லை. முதல் குற்றஅறிக்கை தாக்கல் செய்தபோது, 5 ம் எதிரிக்கு எதிராக எந்தவித முகாந்திரமும் இல்லை என்றால் சரியல்ல. 5 ம் எதிரி அரசியல் பிரமுகர் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. 5 ம் எதிரியை .....

வழக்கில் சேர்க்க சொல்லி அரசியல் அழுத்தம் கொடுத்த காரணத்தினால், அவரை சம்மந்தமில்லாமல் வழக்கில் சேர்த்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் சொன்னபடி 4 ம் தேதி அ.சா.4 ஐ விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. நோடல் அதிகாரியிடம் நான் வாக்குமூலம் எதுவும் பதிவு செய்யவில்லை என்றால் சரியல்ல. அ.சா.4 அஷ்வினியை நான் எத்தனை முறை விசாரித்தேன் என்றால் ஒருமுறை விசாரித்தேன். அ.சா.4 அஷ்வினி என்னால் தயாரிக்கப்பட்ட சாட்சி என்றால் சரியல்ல. எதிரிகளின் ஒப்புதல் வாக்குமூலங்களை நானாகவே தயாரித்துக்கொண்டேன் என்றால் சரியல்ல. சாட்சி கவிதா என்பவரை நான் விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. 5 ம் எதிரிக்கும், இவ்வழக்கிற்கும் தொடர்பில்லை என்றால் சரியல்ல. 5 ம் எதிரிக்கு சாதிச்சான்றிதழை நான் வாங்கவில்லை என்றால் சரியல்ல. அது சம்மந்தமாக சாட்சியை நான் விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல.

நான் சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில், சொன்ன விதத்தில் 5 ம் எதிரியை நான் கைது செய்யவில்லை என்றால் சரியல்ல. 5 ம் எதிரிக்கும் இவ்வழக்கு சம்பவத்திற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.

<u>**7** ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

7 ம் எதிரியை நான் கைது செய்யவில்லை என்றால் சரிதான். ஆய்வாளர் கைது செய்தார். 01.10.2020 அன்று 7 வது எதிரிக்கு சாதிச்சான்றிதழ் கேட்டு வட்டாட்சியருக்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்தேன். பள்ளப்பட்டி, சௌந்திராபுரம் என்ற ஊர் கரூரிலிருந்து 40 கி.மீ. தொலைவில் உள்ளது. அ.சா.19 கார்த்திக் என்பவரின் வாக்குமூலத்தை பொய்யாக தயாரித்தேன் என்றால் சரியல்ல. 5 முதல் 12 எதிரிகளை பொய்யாக வழக்கில் சேர்த்துவிட்டு, கார்த்திக் என்பவரை 90 நாள் கழித்து சாட்சியாக விசாரித்துள்ளேன் என்றால் சரியல்ல. அ.சா.19 கார்த்திக் என்பவரை 11.12.2020 அன்று நான் விசாரித்தேன்.

18.09.2020 காலை 9.00 மணி முதல் இரவு 7.00 மணிவரை கரூர் வட்டம், காக்காவாடி கிராமம், குள்ளம்பட்டியில் உள்ள டிசைன் பிளஸ்பிரஸ் என்ற நிறுவனத்தில் 7ம் எதிரி வேலை பார்த்து வந்தார் என்றால் சரியல்ல. 29.09.2020 அன்று 7ம் எதிரியை மாலை 5.30 மணிக்கு சட்டத்திற்கு புறம்பாக கைது செய்தேன் என்றால் சரியல்ல. 03.10.2020 அன்று காலை 11.00 மணிக்கு 7ம் எதிரியை கைது செய்தேன் என்றும், அதற்கு முன்பாகவே அவரது சாதிச்சான்றிதழ் கேட்டு விண்ணப்பித்துவிட்டேன் என்றால் புலன்விசாரணையில் எதிரி சம்மந்தப்பட்டிருப்பது எனக்கு தெரிந்ததால், புலன்விசாரணைக்காக சாதிச்சான்றிதழ் கேட்டு விண்ணப்பித்தேன். நான் சொல்வது தவறு என்றும், 7ம் எதிரியை கைது செய்தும், அவரது வாகனத்தையும் 29.09.2020 அன்றே கைப்பற்றியும் காவல்நிலையத்தில் வைத்திருந்தேன் என்றும் சொன்னால் சரியல்ல. நான் சொன்னபடி, சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் எதிரி பிரேம் (எ) பிரேம்குமாரை கைது செய்யவில்லை என்றால் சரியல்ல. எதிரி பிரேம்குமார் ராஜலிங்கமன்றத்தில் இல்லை என்றும், அதனால்தான் அவரை நான் நேரில் சென்று கைது செய்யவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. உதவி புலன்விசாரணை அதிகாரியாக நியமனம் செய்யப்பட்ட ஆய்வாளர் அவரை பிடித்து வந்தார்.

30.10.2020 அன்று 7ம் எதிரியின் வாகனத்தை நான் கைப்பற்றினேன் என்று சொல்வது பொய் என்றால் சரியல்ல. அ.சா.3 பிரவீன், அ.சா.10 கார்த்திக் ஆகியோர் என்னால் உருவாக்கப்பட்டு, அவர்களின் வாக்குமூலங்கள் என்னால் தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

17.09.2020 அன்று 7ம் எதிரி உட்பட மற்ற எதிரிகள் இரவு 11.00 மணிக்கு சதித்திட்டம் தீட்டினார்கள் என எனது ஆலோசனையின்பேரில், பொய்யாக வாக்குமூலம் தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல.

7 ம் எதிரி வழக்கு சம்பவத்தில் ஈடுபடவில்லை என்றும், அவருக்கும், இவ்வழக்கு சம்பவத்திற்கும் தொடர்பில்லை என்றும் சொன்னால் சரியல்ல. 7 ம் எதிரியின் வாகனத்தை கைப்பற்றியதால், அவரை தவறுதலாக இவ்வழக்கில் சேர்த்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் சரிவர புலன்விசாரணை செய்யாமல், 7 ம் எதிரிக்கு எதிராக குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

7 ம் எதிரியுடன் சேர்த்து 5 முதல் 11 எதிரிகளையும் இவ்வழக்கில் தவறுதலாக சேர்த்துள்ளேன் என்றால் சரியல்ல. 5 முதல் 11 எதிரிகள் நேரடியாகவோ, மறைமுகமாகவோ இவ்வழக்கில் ஈடுபடவில்லை என்றால் சரியல்ல. 5 முதல் 11 எதிரிகள் வழக்கில் தொடர்புடையவர்களுக்கு எவ்வித உதவியும் செய்யவில்லை என்றால் சரியல்ல.

**10** ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

7 ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்வதாக கற்றறிந்த வழக்கறிஞர் தெரிவித்தார்.

**11** ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

7 ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்வதாக கற்றறிந்த வழக்கறிஞர் தெரிவித்தார்.

மறு விசாரணை

இல்லை.

ஒம்/- ஆர்.சண்முகசுந்தரம்
முதன்மை மாவட்ட நீதிபதி,
கரூர்